26.03.2016

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 50 அடியாக சரிவு

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து சரிந்துள்ளதால் வெள்ளிக்கிழமை நிலவரப்படி நீர்இருப்பு 50 அடியாக உள்ளது.

ஈரோடு மாவட்ட மக்களின் முக்கிய நீராதாரமாக உள்ளது பவானிசாகர் அணை.

இந்த அணையின் மூலம் 2 லட்சத்து 7 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. தற்போது கோடை வெயிலின் தாக்கம் அதிகமாகி வருவதால் மேல்பவானி, அவலாஞ்சி, குந்தா, கெத்தை, பில்லூர் அணை நீர்ப்பிடிப்பு பகுதியில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனால் மேட்டுப்பாளையம் பவானி ஆற்றில் வரத்து குறைந்துவிட்டது.

இதேபோன்று, முக்குருத்தி, மசினகுடி, பைக்காரா, போர்த்திமந்து, கொடநாடு ஆகிய இடங்களிலும் வனப்பகுதி காய்ந்து கிடப்பதால் மோயாற்றுக்கு வந்து சேரும் நீர்வரத்தும் சரிந்துள்ளது. பவானி ஆறும், மோயாறும் தான் பவானிசாகர் அணைக்கு முக்கிய நீர்வரத்தாகும்.

வெள்ளிக்கிழமை மாலை 6 மணி நிலவரப்படி, அணைக்கு 301 கன அடி நீர்வரத்தும், அணையில் இருந்து ஆற்றுக்கு 800 கன அடிநீரும் கால்வாய்க்கு 2,100 கனஅடி நீரும் திறந்து விடப்படுகிறது. கால்வாய்க்கு மேலும் 14 நாள்கள் நீர் திறந்துவிடப்படும். அதன்பிறகு கால்வாய்க்கு திறந்துவிடப்படும் தண்ணீர் முற்றிலும் நிறுத்தப்படும். தற்போது, அணையின் நீர் இருப்பு 50

அடியாக உள்ளது. அணையின் நீர் இருப்பு குறைந்து வருவது விவசாயிகளை கவலையில் ஆழ்த்தியுள்ளது.

**காய்கறி விலை சரிவு; பழங்கள் விலை அதிகரிப்பு**

வரத்து அதிகரித்துள்ளதால், காய்கறிகளின் விலை குறைந்து வருகிறது. ஆனால், பழங்களின் விலை அதிகரித்துள்ளது.
சென்னை கோயம்பேடு சந்தைக்கு தமிழகம் மட்டுமின்றி அண்டை மாநிலங்களில் இருந்தும் காய்கறிகள், பழங்கள் விற்பனைக்காக வருகின்றன.

இந்த நிலையில் விளைச்சல்-வரத்து அதிகரிப்பு காரணமாக, தினமும் 260 முதல் 280 லாரிகளில் காய்கறிகள் வரத்து உள்ளது.
கடந்த வாரம் ரூ.40 வரை விற்பனை செய்யப்பட்ட கேரட் ரூ.28-க்கும், ரூ.40 வரை விற்பனையான கத்தரிக்காய் ரூ.25-க்கும் விற்பனையாகின்றன.
இதுதவிர, உருளைக்கிழங்கு, சேனைக்கிழங்கு, பீன்ஸ், அவரைக்காய் உள்பட காய்கறிகளின் விலை கிலோவுக்கு ரூ.5 முதல் ரூ.10 வரை குறைந்துள்ளது. முகூர்த்த நாள்கள், வெயிலின் தாக்கம் காரணமாகவும் அடுத்த சில நாள்களில் காய்கறிகள் விலை உயர வாய்ப்புள்ளது என மொத்த வியாபாரி சௌந்தரராஜன் தெரிவித்தார்.

இருப்பினும், பழங்களின் விலை அதிகரித்து உள்ளது. இதுகுறித்து பழ வியாபாரி பழனிச்சாமியிடம் கேட்டபோது, அவர் கூறியதாவது:-
நிகழாண்டில் கோடைக்காலம் முன்பே தொடங்கியதன் காரணமாக பழங்களின் விலை உயர்ந்து உள்ளது. சாத்துக்குடி, ஆரஞ்சு உள்ளிட்ட பழங்களின் விலை ரூ.10 வரை அதிகரித்து உள்ளது. ஆப்பிள் விலையும் ரூ.20 வரை அதிகரித்து இருக்கிறது.
மாம்பழம், பலாப் பழம் சீசன் தொடங்க உள்ளது. தினமும் 220 லாரிகள் பழங்கள் வரத்து உள்ளது என்றார்.

காய்கறிகளின் விலை நிலவரம் (ஒரு கிலோ):

பெரிய வெங்காயம்- ரூ.15, உருளைக்கிழங்கு- ரூ.18, கேரட்- ரூ.20, பீன்ஸ்- ரூ.20, நூக்கல்- ரூ.20, பீட்ரூட்- ரூ.20, முட்டைக்கோஸ்- ரூ.12, மிளகாய்- ரூ.40, இஞ்சி- ரூ.35, சேனைக்கிழங்கு- ரூ.35, சேப்பங்கிழங்கு- ரூ.28, கத்தரிக்காய்- ரூ.15 முதல் ரூ.25 வரை, வெண்டைக்காய்- ரூ.15, அவரைக்காய்- ரூ.15, கோவைக்காய்- ரூ.22, கொத்தவரங்காய்- ரூ.15, பாகற்காய்- ரூ.25, முருங்கைக்காய்- ரூ.40, முள்ளங்கி- ரூ.15, வெள்ளரிக்காய்- ரூ.15, புடலங்காய்- ரூ.15, தக்காளி- ரூ.8 முதல் ரூ.10 வரை, காலிபிளவர்(ஒன்று)- ரூ.16, பீர்க்கங்காய்- ரூ.20, சுரைக்காய்- ரூ.15, சாம்பார் வெங்காயம்- ரூ.15, தேங்காய்- ரூ.15, வாழைக்காய்- ரூ.4.

பழங்களின் விலை நிலவரம் (கிலோவில்): வாஷிங்டன் ஆப்பிள்- ரூ.160 முதல் ரூ.170 வரை, சீனா ஆப்பிள்- ரூ.140 முதல் ரூ.150 வரை, சிம்லா ஆப்பிள் (இந்தியா) - ரூ.130 முதல் ரூ.140 வரை, மாதுளை- ரூ.110 முதல் ரூ.120 வரை, சாத்துக்குடி- ரூ.50, ஆரஞ்சு-ரூ.50, சப்போட்டா-ரூ.30, அன்னாசிபழம் (ஒன்று)- ரூ.40, கொய்யா- ரூ.35, வாழை (தார்)- ரூ.250 முதல் ரூ.400 வரை, தர்பூசணி ஒரு கிலோ- ரூ.12 முதல் ரூ.18 வரை, டிராகன் பழம் - ரூ.100, விதையில்லா(சீட்லெஸ்) கருப்பு திராட்சை - ரூ.100.

## கடும் வெயிலால் முட்டை உற்பத்தி குறைய வாய்ப்பு

கடும் வெயில் காரணமாக, முட்டை உற்பத்தி குறைய வாய்ப்புள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: அடுத்த நான்கு நாள்களுக்கு வானம் லேசான மேக மூட்டத்துடன் மழையற்றும் காணப்படும். முழு வீச்சில் கோடை தொடர்வதால், கோழிகளில் அதிக அளவில் வெப்ப அயற்சியும், வெப்ப அதிர்ச்சியும் காணப்படும். கோழிகள் இறப்பு, முட்டை உற்பத்தியில் திடீர் குறைபாடுகள், வேகமாகக் குறையும் தீவன எடுப்பு போன்ற

நிகழ்வுகளைக் குறைக்க குளிர்ந்த நீர், அமினோ அமிலங்கள் நிறைந்த தீவனம் மற்றும் தீவனத்தில் சிறு அளவில் எண்ணெய் கலப்பு ஆகியவற்றுடன் நீரில் வைட்டமின் 2 சி மற்றும் எலக்ட்ரோலைட்ஸ் தாது உப்புகளைக் கலந்து கொடுத்து வர வேண்டும். அதிக வெப்பத்தால். நோய் எதிர்ப்புக் குறைய வாய்ப்புள்ளதால், நோய் எதிர்ப்புத் தன்மையை ஊக்குவிக்கும் வகையில் தடுப்பு வியூகமாக தீவனத்தில் வைட்டமின் 2 ஏ, இ மற்றும் சி ஆகியவற்றைப் பரிந்துரைக்கும் அளவுக்கு மேல் 5 முதல் 10 சதவீதம் வரை சேர்த்து வர வேண்டும்.

கோழியின நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் கடந்த வாரம் பரிசோதனை செய்யப்பட்ட இறந்த கோழிகள் பெரும்பாலும் வெப்ப அயற்சியால் பாதிக்கப்பட்டிருந்தது தெரிய வந்துள்ளது. இதனால் பண்ணையாளர்கள் அதற்கேற்றாற்போல் தகுந்த கோடை கால பராமரிப்பு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மரம் நடும் விழா**

காஞ்சிபுரம் காரைப்பேட்டையில் உள்ள காஞ்சி கல்வியியல் கல்லூரியில் மரம் நடும் விழா அண்மையில் நடைபெற்றது.

இவ் விழாவுக்குக் கல்லூரி முதல்வர் தெ.அன்பு தலைமை வகித்தார். சமூக ஆர்வலர் சனீஸ்வரன், பட்டம்மாள் கலை, அறிவியல் கல்லூரியின் முதல்வர் ஆர்.ராஜ்குமார், பசுமை இந்தியா அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் எல்.சுந்தர் ஆகியோர் பங்கேற்று மரம் நடுவதன் அவசியம் குறித்து விளக்கினர்.

இ6ந்நிகழ்ச்சியில் டாக்டர் அப்துல் கலாம் அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் ஆர்.ஜெயராஜ் பங்கேற்று விலையில்லா மரக்கன்றுகளை வழங்கினார்.

## பழனியில் இளநீர், வெள்ளரி விற்பனை அதிகரிப்பு

கோடை காலத்தை சமாளிக்க, பழனியில் இளநீர், வெள்ளரி, தர்பூசணி ஆகியவற்றின் விற்பனை திகரித்துள்ளது.

பங்குனி மாதம் வெயில் அதிகமாக இருக்கும் என்பதால், மூலவர் தண்டாயுதபாணி சுவாமியை குளிர்ச்சியாக வைக்க பழங்காலத்தில் ஏற்பட்ட முறையே பங்குனி உத்திர காவடி புறப்பாடாகும். பக்தர்கள் கொண்டு வரும் கொடுமுடி தீர்த்தமானது, மூலவருக்கு அபிஷேகம் செய்யப்படுகிறது. இதனால், இந்த மாதங்களில் மூலவர் சிலை குளிர்ச்சியாகவே இருக்கும்.

அதேபோல், பொதுமக்கள் கோடையை சமாளிக்க பலவித குளிர்பானங்களை அருந்துகின்றனர். பழனி பேருந்து நிலையம் முதல் அடிவாரப் பகுதி வரை பல்வேறு இடங்களில் இளநீர், வெள்ளரி, தர்பூசணி, கம்மங்கூழ் போன்றவை விற்கப்படுகின்றன. இவற்றை கோயிலுக்கு வரும் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் விரும்பி உண்கின்றனர்.

இதனால், பழனி நகர் முழுவதும் வியாபாரிகள் அதிகரித்து வருகின்றனர். கோடையை சமாளிக்க இயற்கையான பானங்களே சிறந்தது என்பதால், இவை அதிக அளவில் விற்பனையாகின்றன.

## ஆண்டிபட்டி சந்தையில் துளசி விலை சரிவு

ஆண்டிபட்டி பூ சந்தையில் துளசி கிலோ ரூ. 5-க்கு விலை போவதால், அவற்றை விவசாயிகள் சாலையில் கொட்டினர்.

ஆண்டிபட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் மல்லிகை, செவ்வந்தி, ரோஜா மற்றும் பல்வேறு பூக்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. தற்போது, பூக்களின் வரத்து அதிகரித்துள்ளதால், விலை குறைந்து வருகிறது.

வெள்ளிக்கிழமை, சுமார் 1 டன் அளவிலான துளசி சந்தைக்கு விற்பனைக்கு வந்தது. ஆனால், இவற்றுக்கு போதிய விலை கிடைக்காததால், கிலோ ரூ. 5-க்கு விற்கப்பட்டது.

வியாபாரிகளும் துளசியை கொள்முதல் செய்ய வராததால், சந்தையில் தேங்கியது. இதனால் வேதனையடைந்த விவசாயிகள், ஆண்டிபட்டி-வேலப்பர் கோயில் சாலையில் துளசியை கொட்டுவிட்டுச் சென்றனர்.

இது குறித்து விவசாயி வேல்முருகன் கூறுகையில், துளசி விதைகள் வெளியூரில் இருந்து வாங்கி வரப்பட்டு, உரமிட்டு வளர்க்கப்படுகிறது. இதனை பறிப்பதற்கு கிலோவுக்கு ரூ. 5 வழங்கப்படுகிறது. மேலும், போக்குவரத்துச் செலவு என ரூ. 10 செலவழிக்கப்படுகிறது.

ஆனால், சந்தையில் கிலோ ரூ. 5 விற்பனையாவதால், எங்களுக்கு நஷ்டம்தான். மேலும், வியாபாரிகளும் வாங்க வராததால், சாலையில் கொட்டிச் சென்றோம் என்றார்.

## பெருந்துறை கூட்டுறவு சங்கத்தில் கொப்பரை ஏலம் 2 நாள் ரத்து

பெருந்துறை வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் சனிக்கிழமை (மார்ச் 26) மற்றும் புதன்கிழமை (மார்ச் 30) ஆகிய நாள்களில் நடைபெறவிருந்த கொப்பரை ஏலம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

பெருந்துறை வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் ஒவ்வொரு வாரமும் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் கொப்பரை ஏலம் நடைபெறுகிறது.

இதில், ஈரோடு, நாமக்கல், கரூர், சேலம், திருப்பூர் விவசாயிகள் பங்கேற்கின்றனர். ஆண்டு கணக்கு முடிப்பை முன்னிட்டு மார்ச் 26, 30 ஆகிய

தேதிகளில் நடைபெறவிருந்த ஏலம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மீண்டும் அடுத்த ஏலம் ஏப்ரல் 2- ஆம் தேதி நடைபெற உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கவுந்தப்பாடி பாசன சபை அலுவலகத்தில் உலக தண்ணீர் தினவிழா

கோபி கோட்டம், கவுந்தப்பாடி பாசனசபை அலுவலகத்தில் உலக தண்ணீர் தினவிழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கீழ்பவானி முறைநீர் பாசன விவசாயிகள் கூட்டமைப்பு பகிர்மான கமிட்டி சார்பில் நடைபெற்ற இந்த விழாவுக்கு, கே.ஆர்.லோகநாதன் தலைமை வகித்தார். தலைவர் அ.செ.பழனிசாமி முன்னிலை வகித்தார். கூட்டமைப்பு இணைச் செயலாளர் பா.மா.வெங்கடாசலபதி வரவேற்றார். உலக தண்ணீர் தினத்தையொட்டி, விவசாயிகள் அனைவரும் நீர் பாதுகாப்பு குறித்து உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

கூட்டத்தில், தமிழக அரசு சார்பில் நீர்பாசனத் துறைக்கு தனி அமைச்சகம் அமைக்க வேண்டும். கீழ்பவானி பாசனத் திட்ட நீர்நிலை ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். கீழ்பவானி பாசனத் திட்ட நிலங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களைக் காப்பாற்ற ஏப்ரல் 18-ஆம் தேதி வரை அணைகளில் இருந்து நீர் திறக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. விழாவில், கீழ்பவானி வடிநிலக் கோட்ட செயற்பொறியாளர் வீ.ராசு, பாசன நீரின் அளவுகள் எனும் தொகுப்பை வெளியிட கால்நடைத் துறை இணை இயக்குநர் (ஓய்வு) மருத்துவர் நா.அருணாசலம் பெற்றுக் கொண்டார்.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பு தலைவர் பா.அ.சென்னியப்பன் "பாசன நீர் மதிப்பு' எனும் தொகுப்பை வெளியிட விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.எம்.முனுசாமி பெற்றுக் கொண்டார். கூட்டத்தில், கோபி கால்வாய் கோட்ட உதவி செயற்பொறியாளர் எம்.விஜயதுரை, உதவிப் பொறியாளர் பொன்னுசாமி உள்ளிட்ட 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து

கொண்டனர். பகிர்மான கமிட்டி துணைச் செயலாளர் எஸ்.எம்.சுப்பிரமணியம் நன்றி கூறினார்.

**அரசு கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட முகாம்**

திருவாடானை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவ மாணவிகளின் நாட்டு நலப்பணித் திட்ட முகாம், திருவாடானை அருகே உள்ள திருவிடைமதியூர் கிராமத்தில் நடைபெற்றது.

இம்முகாம் கடந்த 21ஆம் தேதி முதல் நடைபெற்று வருகிறது. நாட்டு நலப் பணிக்குப் பின் சிறப்பு முகாம்கள் நடைபெற்றன. முகாமில் திருவிடைமதியூர் கிராமத்தைச் சுற்றி மரக்கன்றுகள் நடப்பட்டன.

வியாழக்கிழமை நடைபெற்ற நாட்டு நலப்பணி முகாமில் மரக்கன்றுகள் நடும் விழாவுக்கு கல்லூரி தமிழ்துறை பேராசிரியர் பழனியப்பன் தலைமை வகித்தார். காவல் ஆய்வாளர் முருகன், வணிகவியல் துணைத் தலைவர் இளையராஜா பாண்டுகுடி ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் இருதயராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அதனைத் தொடர்ந்து திருவாடானையில் தேர்தல் பற்றிய விழிப்புணர்வு பேரணி மற்றும் சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி வெள்ளிகிழமை நடைபெற்றது. இதில் கல்லூரி ஆங்கிலத் துறைத் தலைவர் ராஜசேகர் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக வழக்குரைஞர்கள் கலந்துகொண்டு சட்டம் பற்றி விளக்கினார்கள்.

அதனைத் தொடர்ந்து திருவிடைமதியூர் கிராம ஊருணியில் இருந்த காட்டுக்கருவேல் மரங்களை மாணவ மாணவியர் அகற்றி சுத்தம் செய்தனர், இந்த முகாமில் கணினி அறிவியல் விரிவுரையாளர் ராமமூர்த்தி, வணிகவியல் துறை பேராசிரியர் முத்துராமன் மற்றும் மாணவ மாணவியர் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் சுரேஷ் செய்திருந்தார்.

**அரசு கூட்டுறவு ஏல மையத்தில் 70 சதவீத தேயிலை தூள் விற்பனை**

குன்னூர் அரசு கூட்டுறவு தேயிலை ஏல மையத்தில் இந்த ஆண்டுக்கான 11-ஆவது ஏலத்தில் 70 சதவீதம் தேயிலைத் தூள் விற்பனையாகியுள்ளதாக வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில், மொத்தம் 2 லட்சத்து 54 ஆயிரத்து 762 கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 1 லட்சத்து 54 ஆயிரத்து 81 கிலோவும், டஸ்ட் ரகம் 1 லட்சத்து 581 கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிக அளவில் பங்கேற்று இருந்தாலும் குறைந்த அளவில் மட்டுமே தேயிலைத் தூள்களை கொள்முதல் செய்தனர்.

இதனால் 70 சதவீத தேயிலைத் தூள் விற்பனையானதுடன் அனைத்து ரகத்துக்கும் கடந்த வார விலைதான் வழங்கப்பட்டது. இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ரூ. 65 முதல் ரூ. 70 வரையிலும், உயர் வகை ரூ. 70 முதல் ரூ.75 வரையிலும், டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ. 70 முதல் ரூ.75 வரையிலும், உயர் வகை ரூ. 80 முதல் ரூ.85 வரையிலும் விற்பனையானது. கடந்த சில வாரங்களாக தேயிலை தூள் விற்பனை குறைந்து வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மூன்று மடங்கு அதிகரித்தது பழ விற்பனை வெயில் எதிரொலி**

பொள்ளாச்சி: பொள்ளாச்சி பகுதியில் தகிக்கும் வெயிலின் தாக்கத்தில் இருந்து தப்பிக்க, மக்கள் பழங்களின் பக்கம் சாய்ந்துள்ளனர். இதனால் பழ விற்பனை மூன்று மடங்கு அதிகரித்துள்ளதாக பழ வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

குளிர்ந்த பருவநிலைக்கு பெயர் போன பொள்ளாச்சியில், இந்தாண்டு கோடை வெப்பம் தகிப்பதாக உள்ளது. இத்தனை உஷ்ணத்திற்கு பழக்கப்படாத மக்கள், அதை சமாளிக்க பழங்களை அதிகம் உண்ண துவங்கியுள்ளனர்.பழரசம் தான் மக்களின் விருப்ப பானமாக மாறியுள்ளது. பழக்கடைகளில் மட்டும் தான் மக்களின் கூட்டத்தை காண முடிகிறது.

இதனால் வழக்கத்தை விட பழ விற்பனை அதிகரித்துள்ளது. விலையும் சற்று அதிகரித்துள்ளது. கடந்த மாதம் ஒரு கிலோ, 70 முதல் 100 ரூபாய் வரை விற்பனையான ஆப்பிள் ரகங்கள், தற்போது 110 முதல் 150 வரை விற்பனையாகின்றன.

அதே போல், 25க்கு விற்பனையான ஆரஞ்சு, 50-55க்கும், 20க்கு விற்பனையான முலாம்பழம், 25-30க்கும், 50-100க்கு விற்பனையான திராட்சை ரகங்கள், 80-120க்கும், 10க்கு விற்பனையான பப்பாளி, 20க்கும், 35க்கு விற்பனையான சாத்துக்குடி 45க்கும் விலையுயர்ந்துள்ளது.

மேலும், தற்போது மக்களின் தாகத்தை தகிப்பதில் முன்னணி வகிப்பவை தர்பூசணி மற்றும் வெள்ளரி தான். மக்களால் பெரிதும் விரும்பப்படும் அவை, தர்பூசணி கிலோ, 16 ரூபாய்க்கும், வெள்ளரி 40க்கும் விற்பனையாகின்றன.

இவற்றில் அதிரடியாக விலையுயர்ந்துள்ளது, பழரசம் தயாரிக்க மட்டும் பயன்படும் புளிப்பு திராட்சை தான். கிலோ 30 ரூபாய்க்கு விற்பனையான

இது, தேவை அதிகரித்ததன் காரணமாக, தற்போது 80க்கு விற்பனையாகிறது.

இவற்றில் ஆப்பிள் ரகங்கள் அமெரிக்கா, சீனாவில் இருந்தும், பெரும்பான்மையான பழங்கள் மகாராஷ்டிராவில் இருந்தும் வருகின்றன. மாதுளை மட்டும் காபூல் பகுதியில் அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளதால், 140 ரூபாயில் இருந்து, 120 ரூபாய்க்கு விலை குறைந்து விற்பனையாகிறது.

ரசாயன பானங்களுக்கு பணம் செலவழிப்பதை விட, இப்படி பழங்களுக்கும், பழரசத்திற்கும் முக்கியத்துவம் தர துவங்கியுள்ள மக்களால், ஆரோக்கியமும் மேம்படும்; பழங்களை விளைவிக்கும் விவசாயிகளும் பலன் பெறுவர்.

கோவை ரோட்டில் பழக்கடை வைத்திருக்கும் வின்சென்ட் கூறுகையில், "இந்தாண்டு வெயில் கடுமை என்பதால், மக்கள் உஷ்ண பிரச்னைகளை சமாளிக்க பழங்களை நாடுகின்றனர். இயற்கையாக விளைவிக்கப்படும் பழங்களின் நன்மை, மக்களுக்கு புரிய துவங்கியுள்ளதன் எதிரொலியாக, வழக்கத்தை விட பழ விற்பனை மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. உற்பத்தி தேவையான அளவுக்கு இருப்பதால், பெரும்பாலான பழங்களின் விலை, பெரிய அளவில் உயரவில்லை," என்றார்.

**அறுவடை பணிகள் தீவிரம்: வைக்கோல் விற்பனை ஜோர்**

காஞ்சிபுரம்:மாட்டுக்கு தீவனமாக பயன்படும் வைக்கோல் விற்பனை, மாவட்டம் முழுவதும்

அமோகமாக நடைபெறுகிறது; விவசாயிகளிடம் இருந்து, கால்நடை விவசாயிகள் போட்டி போட்டு வாங்கி செல்கின்றனர்.

கடந்த நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக காஞ்சிபுரம் மாவட்டத்தில் போதிய பருவ மழை பெய்யாததால் நெற்பயிர் விவசாயம் பாதிக்கப்பட்டது. கால்நடை தீவனம் கிடைக்காமல், கால்நடை விவசாயிகள் அவதிப்பட்டு வந்தனர். கடந்த மூன்று மாதங்களுக்கு முன் பெய்த மழையால், மாவட்ட ஏரிகள் நிரம்பி, ஒருபோக விவசாயம் முடிவடைந்துள்ளது; பல இடங்களில் ஒரே நேரத்தில் அறுவடை நடைபெறுவதால், வைக்கோல் அதிக அளவு

கிடைக்கிறது.கால்நடைகளை வளர்க்கும் விவசாயிகள், இந்த வாய்ப்பை பயன்படுத்தி, அதிக அளவில் வைக்கோலை விலைக்கு வாங்கி, மாட்டு வண்டி, லாரி, டிராக்டர் போன்றவைகளில் கொண்டு செல்கின்றனர்.
இந்த ஆண்டு போல், அடுத்த ஆண்டு, கால்நடைகளுக்கு வைக்கோல் கிடைக்குமா என்ற சந்தேகத்தில், முன்னேற்பாடாக, வைக்கோலை வாங்கி செல்பவர்களும் உண்டு.

இலவசமாகவும் கிடைக்கிறது
கடந்த ஆண்டு, ஒரு மாட்டு வண்டி வைக்கோல், 1,500 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இந்த ஆண்டு, ஒரு ஏக்கர் பரப்பில் விளைந்த நெற்பயிர் வைக்கோல், 1,300 ரூபாய்க்கு மட்டுமே விற்கப்படுகிறது. விலை மிகவும் குறைவாக இருந்தாலும், அதை கொண்டு செல்லும் செலவு, வைக்கோல் விலையை விட அதிகமாக உள்ளது. அதுபோல, அடுத்த போக சாகுபடி தயாராகும் விவசாயிகள், தங்கள் வயலில் கிடக்கும் வைக்கோலை, இலவசமாகவும் வழங்கி வருகின்றனர். வயலில் இருந்து வைக்கோலை அப்புறப்படுத்தினால் போதும் என்ற நினைப்பில், இலவசமாகவும் வழங்கி வருகின்றனர்.

**ஏரிகளில் சரியும் நீர்மட்டம்: கவலையில் விவசாயிகள்**

காஞ்சிபுரம்:கோடைக்காலம் துவங்கியுள்ள நிலையில், மாவட்டத்தின் ஏரிகளின் நீர்மட்டம் சரிந்து வருவதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.முந்தைய பல ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு, கடந்த ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் பெய்த வட கிழக்கு பருவமழையால், மாவட்டத்தின் அனைத்து ஏரிகளும் நிரம்பின. கோடைக்காலம் துவங்கியுள்ளது. ஏரிகளில் நீர்மட்டம் வேகமாக சரிந்து வருகிறது; சில ஏரிகளில் நீர் முற்றிலும் வற்றிவிட்டது. ஏரி நீர் விவசாயத்தை நம்பியிருக்கும் விவசாயிகள், நீர்மட்டம் சரிவதை கண்டு, அதிர்ச்சியடைந்துள்ளனர். கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும்,

ஏப்ரல், மே மாதங்களில், ஏரிகளில் நீர் முழுமையாக வறண்டு விடுமோ என, விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

**மகசூல் குறைவு விவசாயிகள் கவலை**

கோத்தகிரி: கோத்தகிரியில் பசுந்தேயிலை மகசூல் குறைந்து வருவதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். கோத்தகிரி சுற்றுப்புற பகுதிகளில், கடந்த இரு மாதங்களுக்கு முன்பு பெய்த பனிப்பொழிவு காரணமாக, தாழ்வான பகுதியில் உள்ள தேயிலை தோட்டங்கள் கருகி காணப்பட்டன. இந்நிலையில், தற்போது கடுமையான வெயில் அடிப்பதால், தேயிலை தோட்டங்களில் ஈரப்பதம் குறைந்து வருவதால், மகசூலும் வெகுவாக குறைந்துள்ளது. இதனால், விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு, நஷ்டஈடு அளிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

**நேந்திரம் வாழை விளைச்சல் விவசாயிகளுக்கு மற்றொரு வருமானம்**

பந்தலூர்: பந்தலூர் பகுதியில் உள்ள தேயிலை தோட்டங்களில், ஊடுபயிராக நேந்திரன் வாழை விளைவிக்கப்படுகிறது.

பந்தலூர் பகுதியில் உள்ள பெரும்பாலான சதுப்பு நிலங்களில், தற்போது, தேயிலை விவசாயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேயிலைக்கு போதிய விலையின்மையால், உரமிடுதல், மருந்து மற்றும் தண்ணீர் தெளித்தல் பணிகளுக்கு, கூடுதலாக செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனை எதிர்கொள்ள, தேயிலை தோட்டங்களில், ஊடுபயிராக

நேந்திரன் வாழை விவசாயத்தை பலரும் மேற்கொண்டு வருகின்றனர்.

விவசாயிகள் கூறுகையில்,' பசுந்தேயிலைக்கு விலை குறைவாக இருந்தாலும், ஆண்டுக்கு ஒருமுறை பலன் தரும் நேந்திரன் வாழை விவசாயத்தால், ஓரளவுக்கு நஷ்டத்தை ஈடுகட்ட இயலும்' என்றனர்.

**உலக தண்ணீர் தினம்**

மஞ்சூர்: மஞ்சூரில், உலக தண்ணீர் தினம் கொண்டாடப்பட்டது.

மஞ்சூர் காந்தி சேவா அறக்கட்டளை சார்பில், உலக தண்ணீர் தினம் கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சிக்கு, அறக்கட்டளை செயலாளர் போஜன் தலைமை வகித்தார். நிர்வாகிகள் ஆலன், அர்ஜூணன் முன்னிலை வகித்தனர். இதில், தண்ணீரின் அவசியத்தை குறித்து விளக்கியதுடன், 'நிலத்தடி நீரை பாதுகாப்பது; நீர் ஆதாரங்களை பெருக்குவது; தண்ணீர் வீணாவதை தவிர்ப்பது, சிக்கனமாக பயன்படுத்துவது' என்பது போன்ற கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டன. தொடர்ந்து, 'தண்ணீர்' என்ற தலைப்பில் நடத்தப்பட்ட பேச்சு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. முடிவில், அறக்கட்டளை நிர்வாகி காந்தி நன்றி கூறினார்.

**இரண்டாம் போக நெல் சாகுபடியில் விவசாயிகள்**

தேவதானப்பட்டி: பெரியகுளம் தாலுகாவில் கிணற்று நீர் பாசன விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு மூலம் இரண்டாம் போக நெல் சாகுபடி செய்துள்ளனர். கண்மாய் பாசன விவசாயிகள் மழையை எதிர்பார்த்து காத்துள்ளனர்.

இத் தாலுகாவில் வராகநதியில் வரும் நீரை ஆதாரமாக கொண்டு சில்வார்பட்டி சிறுகுளம், ஜெயமங்கலம் வேட்டுவன்குளம், குள்ளப்புரம் பெரிகண்மாய், நல்லகருப்பன்பட்டி நாரணன் குளம் உள்ளிட்ட 15 மேற்பட்ட கண்மாய்கள் நிரப்பப்பட்டு 5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் முதல் போக நெல்சாகுபடி செய்யப்பட்டு அறுவடைப்பணிகள் முடிந்துள்ளது. கடந்த அக்டோபருக்கு பின் வராகநதியின் நீர் ஆதாரமான மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் மழை இல்லை.

வராகநதியில் நீர்வரத்து இல்லாததால் ஆறு வண்டு கிடக்கிறது. கண்மாய்களில் நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. இந்நிலையில் கிணற்று நீர் பாசன விவசாயிகள் இரண்டாம் போக நெல் சாகுபடி பணியை

துவங்கி உள்ளனர். மேல்மங்கலம், கோயில்புரம் உட்பட சில கிராமங்களில் நேரடி நெல் விதைப்பு செய்து 10 முதல் 15 நாட்கள் ஆகிறது. ஆனால் கண்மாய் பாசன விவசாயிகள் கோடை மழை பெய்தால் நெல்சாகுபடி பணியை மேற்கொள்ள தயாராக உள்ளனர்.

**புகையிலை பொருட்கள் விற்பனை அதிகரிப்பு**

பெரியகுளம்: பெரியகுளத்தில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை அமோகமாக நடக்கிறது.

பெரியகுளம் பகுதியில் புகையிலை பொருட்கள், சிகரெட், பீடி, புகையிலை கொண்டு தயாரிக்கப்படும் பாக்கு, பதப்படுத்திய புகையிலையை பயன்படுத்துவது ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. இதனால் வாய் புற்றுநோய் ஏற்பட்டு, சுவை அறியும் திறன் குறையும். பொதுநல அமைப்புகள் விழிப்புணர்வு ஏற்படுத்தியும் பயன்பாடு குறைந்தபாடில்லை.

தமிழக அரசு புகையிலை பொருட்களுக்கு தடை விதித்ததன் தொடர்ச்சியாக, பெரியகுளம் பகுதிகளில் புகையிலை மொத்த விற்பனையாளர்களின் இடங்கள், பெட்டிகடைகள் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் உணவு பாதுகாப்பு அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர். அவற்றின் விற்பனையை கண்காணித்து நடவடிக்கை எடுத்தனர்.

தொடர் நடவடிக்கை இல்லாததால், புகையிலை வியாபாரம் அதிகரித்துள்ளது.

இத் தாலுகாவில் கிராமங்கள் மற்றும் உட்கடை கிராமங்களில் "டூப்ளிகேட்' சிகரெட், பீடிகளின் விற்பனை அதிகரித்துள்ளது. அதிக லாபம் கிடைப்பதால் சில கடைக்காரர்கள் தெரிந்தே வாங்குகின்றனர். இதனால் பாதிப்பு ஏற்படுகிறது. புகையிலை மற்றும் டூப்ளிகேட் சிகரெட், பீடி விற்பனையார்கள் மீது நடவடிக்கை எடுப்பது அவசியம்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நாட்டு தக்காளி வரத்து அதிகரிப்பு கிலோ ரூ.2 முதல் ரூ.3க்கு கொள்முதல்**

கோவை, :நாட்டு தக்காளி கிலோ ரூ.2 முதல் ரூ.3க்கு கொள்முதல் செய்யப்படுவதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். கோவை சாய்பாபா காலனியிலுள்ள எம்ஜிஆர் காய்கனி மொத்த மார்க்கெட் உள்ளது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், வெளி மாநிலங்களில் இருந்தும் இங்கு காய்கறி கொண்டு வரப்படுகிறது.இதில் நாட்டு தக்காளி வரத்து கடந்த 2 மாதங்களாக தினசரி 50 லாரிகளில் வந்தவண்ணம் உள்ளது. இதே போல் பல்வேறு பகுதிகளுக்கும் வரத்து குறையவில்லை. எம்ஜிஆர் மார்க்கெட்டில் வரத்து குறையாத நிலையில், விலை தொடர்ந்து குறைந்து வருகிறது.

கடந்த 15 நாட்களுக்கு முன்பு கிலோ ரூ.10 ஆக இருந்தது, தற்போது கிலோ ரூ.5 ஆக உள்ளது. நாட்டு தக்காளி வரத்து அதிகரிப்பால், விவசாயிகளிடம் கொள்முதல் விலை கிலோ ரூ.2 முதல் ரூ.3 ஆக உள்ளது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அதே போல் ஆப்பிள் தக்காளி கடந்த 2 மாதங்களாக தினசரி 20 லாரிகளில் வந்தவண்ணம் உள்ளது. வரத்து குறையவில்லை. ஒரு கிலோ விலை ரூ.10 என்ற அளவில் ஒரே நிலையில்உள்ளது.

இது குறித்து வியாபாரிகள் கூறுகையில், 'நாட்டு தக்காளி கோவை அருகேயுள்ள நாச்சிபாளையம், பொள்ளாச்சி, உடுமலை, மற்றும் மைசூர், சிக்மகளூர் ஆகிய பகுதிகளில் இருந்து வருகிறது. வரத்து அதிகமாக உள்ளதால் விலை உயரவில்லை. ஆப்பிள் தக்காளி கர்நாடக எல்லையிலுள்ள சிந்தாமணி, மற்றும் ஓசூர், சிக்மகளூர் ஆகிய பகுதிகளில்

இருந்து வருகிறது. ஆப்பிள் தக்காளியின் வரத்தும் சீராக உள்ளது. அடுத்து கோடை மழை பெய்தால், தக்காளி பூக்கள் உதிரும், செடிகள் சாயும். அப்போது தக்காளி வரத்து குறையும். விலை உயரும்' என்றனர்.

**கிருஷ்ணகிரியில் தக்காளி விலை கடும் வீழ்ச்சி கிலோ ரூ.2க்கு விற்பனை குளிர்பதன கிடங்கு அமைக்க கோரிக்கை**

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி பகுதியில் தக்காளி விலை வீழ்ச்சியடைந்துள்ளதால், குளிர்பதன கிடங்கு அமைக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஓசூர், தளி, தேன்கனிக்கோட்டை, ராயக்கோட்டை, வரட்டனப்பள்ளி, மாதனகுப்பம், போச்சம்பள்ளி, காவேரிப்பட்டணம், சந்தூர், போச்சம்பள்ளி பகுதியில் அதிகளவில் தக்காளி சாகுபடி செய்யப்படுகிறது. மாவட்டத்தில் குறிப்பாக ராயக்கோட்டையில் மிகப்பெரிய தக்காளி சந்தை செயல்பட்டு வருகிறது. இங்கு தினந்தோறும் வெளிமாநில வியாபாரிகள் நேரடியாக கொள்முதல் செய்கின்றனர்.

விவசாயிகள் சொட்டு நீர் பாசனம் முறையிலும், பந்தல் அமைத்தும் நவீன தொழில்நுட்ப முறையில் நாட்டு தக்காளி மற்றும் வீரிய ஒட்டு ரக தக்காளிகளை உற்பத்தி செய்கின்றனர். கடந்த சில மாதங்களாக தக்காளி விலை கிலோ உச்சத்தில் இருந்தது. கிலோ ரூ.60 வரை விற்பனையானது. இந்நிலையில், கடந்த ஒரு மாதகாலமாக தக்காளியின் விலை தொடர்ந்து சரிந்து வருகிறது. விளைச்சல் அதிகரித்து, தக்காளி வரத்து அதிகரித்துள்ளதே இதற்கு காரணம். இதனால் விலையில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. ஒரு கிலோ ரூ.2க்கு விற்பனை செய்யப்படுகிறது.

25 கிலோ கொண்ட ஒரு கிரேடு தக்காளி ரூ.50 வரை விற்பனையானது. மார்க்கெட்டில் தக்காளி குவிக்கப்பட்டுள்ளதால், விற்பனையும் வெகுவாக குறைந்துள்ளது. இதனால் விற்பனையாகாத மீதமுள்ள தக்காளியை சாலையோரங்களில் விவசாயிகள் கொட்டிச் செல்லும் அவல நிலை

ஏற்பட்டுள்ளது. இது விவசாயிகளை வேதனையடையச் செய்துள்ளது. போக்குவரத்து செலவு, கூலி ஆட்களுக்கு கூட தக்காளி விற்பனையில் விலை கிடைக்காததால், பெரும்பாலான விவசாயிகள் செடிகளில் தக்காளியை பறிக்காமல் ஆடு, மாடுகளை மேயவிட்டுள்ளனர்.

இது குறித்து பாலேப்பள்ளி கிராமத்தை சேர்ந்த விவசாயி சத்யா கூறுகையில், '2 ஏக்கரில் தக்காளி பயிரிட்டிருந்தேன். தற்போது விலை குறைந்துள்ளதால், போக்குவரத்து செலவிற்கு கூட விலை கட்டுப்படி ஆகவில்லை. அதனால் தக்காளியை பறிக்காமல் ஆடு, மாடுகளை மேய்ச்சலுக்கு விட்டுள்ளேன்' என்றார். மத்திய, மாநில அரசுகள் நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய குளிர்பதன கிடங்குகளை அமைத்து தந்தால், தக்காளியை இருப்பு வைத்து விலை அதிகம் உள்ள நேரங்களில் விற்பனை செய்ய வசதியாக இருக்கும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**போச்சம்பள்ளியில் கடும் வெயில் மரத்திலிருந்து வெதும்பி விழும் மா பிஞ்சுகள்**

போச்சம்பள்ளி, : போச்சம்பள்ளியில், கடும் வெயில் நிலவுவதால், மரத்திலிருந்து மா பிஞ்சுகள் வெதும்பி கீழே விழுவதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 47 ஆயிரம் ஹெக்டர் பரபரப்பளவில் மா சாகுபடி செய்யபடுகிறது. மா உற்பத்தியில் போச்சம்பள்ளி தாலுகா மாவட்டத்தில் 2ம் இடம் வகிக்கிறது. போச்சம்பள்ளி, சந்தூர், தாதம்பட்டி, புலியூர், மத்தூர், தொகரப்பள்ளி, வேலம்பட்டி, மாவுத்தூர், ஐகுந்தம் உள்ளிட்ட பகுதியில் அதிகம் பயிரிடப்பட்டுள்ளது. இங்கு தோத்தபுரி, பங்கனப்பள்ளி, மல்கோவா, பீத்தர், செந்தூரா, நீலம், அல்போன்சா உள்ளிட்ட ரகங்கள் சாகுபடி செய்யப்படுகிறது. மத்திய பருவ ரகங்களான பெங்களூரா, பங்கனப்பள்ளி, அல்போன்சா போன்றவற்றில் தற்போது பிஞ்சுகள் விட ஆரம்பித்துள்ளது. இந்நிலையில் தற்போது அடிக்கும் வெயிலுக்கு தோட்டத்தில் உள்ள மா பிஞ்சுகள்

வெதும்பி கீழே விழுந்து வருகிறது. இதனால் விவசாயிகள், குத்தகை வியாபாரிகள் பெரும் கவலையில் உள்ளனர்.

மா மரங்களில் மிஞ்சியுள்ள பிஞ்சுகளையாவது காப்பற்ற விவசாயிகள், டிராக்டர் மூலம் தண்ணீரை விலை கொடுத்து வாங்கி மரங்களுக்கு ஊற்றி காப்பாற்றி வருகின்றனர். மழை பெய்தால் மட்டுமே இந்த வருடம் மா விளைச்சல் நன்றாக இருக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

## சினை மாடுகள் பராமரிப்பு பயிற்சி

நாகை, : நாகை வெளிப்பாளையம் கால்நடை மருத்துவமனை வளாகத்தில் செயல்பட்டு வரும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை கழகத்தின் கால்நடை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில், வருகிற 30ம் தேதி காலை 9.30 மணி அளவில் சினை மாடுகள் பராமரிப்பு என்ற தலைப்பில் இலவச ஒரு நாள் பயிற்சி நடைபெற உள்ளது. பயிற்சியில், சினைமாடுகள் பராமரிப்பு, தீவன மேலாண்மை, சினை மாடுகளில் ஏற்படும் கருப்பை பிரச்னைகள், கருச்சிதைவு போன்ற தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. பயிற்சியில் கலந்து கொண்டு பயன்பெற விரும்புவோர் 04365 247123 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டோ அல்லது நேரிலோ தொடர்பு கொண்டு தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளும்படி நாகை கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் சீனிவாசன் தெரிவித்துள்ளார். - See more at:

## மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி

பதிவு வருசநாடு, : கடமலை-மயிலை ஒன்றியத்தில் மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. கால்நடை மருத்துவர் வெயிலான் உள்ளிட்ட மருத்துவர்கள் கடமலை-மயிலை ஒன்றியத்தில் அனைத்து கிராமங்களுக்கும் சென்று மாடுகளுக்கு இலவச கோமாரி நோய் தடுப்பூசி போட்டு வருகின்றனர். நேற்று முன்தினம் மேகமலை ஹைவேவிஸ் பகுதியில் மாடுகளுக்கு தடுப்பூசி போடும் பணி நடைபெற்றது. இதுகுறித்து கால்நடை மருத்துவர்கள் கூறுகையில், 'கடந்த

20 நாட்களாக கடமலை-மயிலை ஒன்றியத்தில் அனைத்து கிராமங்களிலும் மாடுகளுக்கு தடுப்பூசி ணி நடைபெற்று முடிந்துள்ளது. தடுப்பூசி போடாத மாடுகளை கணக்கெடுக்கும் பணி தொடங்கியுள்ளது. அடுத்து ஒரு வாரம் வரை விடுபட்டுள்ள மாடுகளுக்கு தடுப்பூசி போடும் பணிகள் நடைபெற உள்ளது என தெரிவித்தார்.

**கடமலை-மயிலை ஒன்றியத்தில் கைவிட்டது இலவ மரம் கவலையில் விவசாயிகள் தரகர்களால் விலையும் குறைந்தது**

வருசநாடு, : கடமலை-மயிலை ஒன்றியத்தில் இலவம் பஞ்சு உற்பத்தி குறைந்ததால் விவசாயிகள் கவலையில் உள்ளனர். தரகர்களின் போட்டியால் விலையும் குறைந்துள்ளது.கடமலை-மயிலை ஒன்றியத்தில் விவசாயம் முக்கிய தொழிலாக நடைபெற்று வருகிறது. குறிப்பாக முருங்கை, தென்னை, இலவம் விவசாயம் அதிக அளவில் நடைபெற்று வருகிறது. கடந்தாண்டு கடமலை-மயிலை ஒன்றியத்தில் இலவம் பஞ்சு உற்பத்தி அதிகளவில் காணப்பட்டது. சந்தைகளில் இலவம் பஞ்சு கிலோ 100 ரூபாய் வரை விற்பனையானது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

இந்நிலையில் இந்தாண்டு இலவம் பஞ்சு சீசன் தொடங்கியுள்ளது. விவசாயிகள் கடந்த சில மாதங்களாக மரங்களை நல்ல முறையில் பராமரித்து வந்தனர். மேலும் கடமலை-மயிலை ஒன்றியத்தில் போதுமான அளவு மழையும் பெய்தது. இதனால் இந்தாண்டு இலவம் பஞ்சு உற்பத்தி அதிகமாக இருக்கும் என விவசாயிகள் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் இந்த ஆண்டு இலவம் பஞ்சு விளைச்சல் போதிய அளவில் இல்லை.

மரங்களில் மிகவும் குறைவான அளவு மட்டுமே பஞ்சு உற்பத்தி உள்ளது. உற்பத்தி குறைவால் பஞ்சு விலை அதிகரிக்கும் என நினைத்திருந்தனர். ஆனால் தற்போது 1 கிலோ பஞ்சு 60 ரூபாய்க்கு மட்டுமே விற்பனையாகிறது. மேலும் இரண்டாம், மூன்றாம் தர பஞ்சுகள் 50 ரூபாய்

வரை மட்டுமே விற்பனை ஆகிறது. இதனால் இலவம் பஞ்சு விவசாயிகளுக்கு அதிகளவு இழப்பு

ஏற்பட்டுள்ளது. இது குறித்து விவசாயிகள் கூறுகையில், 'இந்த ஆண்டு கடமலை-மயிலை ஒன்றியத்தில் இலவம் பஞ்சு உற்பத்தி குறைவாக இருந்த போதிலும் விலை மிகவும் குறைவாக விற்பனையாகிறது. இதற்கு இடைத்தரகர்கள் இடையிலான போட்டியே முக்கிய காரணமாக உள்ளது. எனவே இலவம் பஞ்சுக்கு உரிய விலை நிர்ணயம் செய்து அரசே கொள்முதல் செய்ய வேண்டும்' என கூறினர்.

## இரண்டாம்போக அறுவடை விறுவிறு வைக்கோல் கொள்முதலில் ஆர்வம் காட்டும் கால்நடை வளர்ப்போர்

உத்தமபாளையம், உத்தமபாளையம் பகுதியில் நெல் அறுவடை தீவிரமடைந்த நிலையில், வைக்கோல் கொள்முதலில் கால்நடை வளர்ப்போர் தீவிர ஆர்வம் காட்டி வருகின்றனர்.கம்பம் பள்ளத்தாக்கில் உத்தமபாளையம், உ.அம்மாபட்டி, ராமசாமிநாயக்கன்பட்டி உள்ளிட்ட பல ஊர்களில் 2ம் போக நெல் அறுவடை தீவிரமாக நடந்து வருகிறது. பெரும்பாலும் அறுவடைக்கு இயந்திரங்களை பயன்படுத்துகின்றனர்.

தேனி மாவட்டத்தை பொறுத்தவரை விவசாயத்திற்கு அடுத்தபடியாக கால்நடைகளை வளர்க்கும் தொழில் முக்கிய தொழிலாக உள்ளது. கறவை மாடுகளை வளர்ப்போர் அறுவடை காலங்களில் வைக்கோலை கொள்முதல் செய்து 4 மாதம் வரை இருப்பு வைப்பர். இப்போது அறுவடை தீவிரமாக நடந்து வரும் நிலையில், கால்நடை வளர்ப்போர் விவசாயிகளிடம் இருந்து வைக்கோல் கொள்முதல் செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

விவசாயிகள் கூறுகையில், 'அறுவடை தீவிரம் அடைந்துள்ள நிலையில் வைக்கோல் வியாபாரம் அமோகமாக நடக்கிறது. இதனை கொள்முதல் செய்து கால்நடைகளை வளர்க்க கூடியவர்கள் இருப்பு

வைப்பர். டிராக்டர்களிலும், மாட்டுவண்டிகளிலும் இதனை ஏற்றி செல்கின்றனர்' என்றனர்.

**உளுந்து சாகுபடி செய்வது எப்படி?**

நாகர்கோவில், :நாகர்கோவில் வேளாண்மை இணை இயக்குநர் இளங்கோ விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: குமரி மாவட்டத்தில் தற்போது உளுந்து சாகுபடி செய்ய ஏற்ற காலமாகும். உளுந்தில் ஏடிற்றி 3, ஏடிற்றி 4, ஏடிற்றி 5, வம்பன் 5 ஆகிய ரகங்கள் உள்ளன. ஹெக்டேருக்கு 20 கிலோ வீதம் பயிரிடலாம். பயிரிடும் போது ஒரு கிலோ விதைக்கு ட்ரைகோடெர்மாவிரிடி 4 கிராம் அல்லது சூடோமோனாஸ் 10 கிராம் கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

பின்னர் ரைசோபியம் 3 பாக்கெட், பாஸ்போபாக்டீரியா கஞ்சி கலந்து ஒரு ஹெக்டேருக்கான விதையை நேர்த்தி செய்யவேண்டும். தொடர் பயிரிடும் முறையில் உகந்த மண் ஈரப்பதத்தில் நெற்பயிரின் அறுவடைக்கு 5 நாளில் இருந்து 10 நாட்களுக்கு முன்னரே விதைகளை விதைக்க வேண்டும். அறுவடை இயந்திரம் மூலம் அறுவடை செய்யும் பகுதிகளில் நெற்பயிரை இயந்திரம் மூலம் அறுவடை செய்யும் முன்னரே விதைகளை விதைக்க வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**குண்டேரிப்பள்ளம் அணை திறப்பு**

கோபி, : கோபி அருகே உள்ள குண்டேரிப்பள்ளம் அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது.கோபி அருகில் உள்ள கொங்கர்பாளையத்தில் குண்டேரிப்பள்ளம் அணை உள்ளது. நீர்ப்பிடிப்பு பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன் பெய்த மழையால் அணை நிரம்பியது. 42 அடி நீர்மட்டத்தை கொண்ட அணையில் தற்போது 41.5 அடி நீர் உள்ளது. இந்நிலையில் அணையின் மூலம் பாசனத்தை பெறும் விவசாயிகள் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

அதைத்தொடர்ந்து அணையில் இருந்து 42 நாட்கள் புன்செய் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. அணையில் இருந்து கோபி தாசில்தார் மாசிலாமணி, பொதுப்பணித்துறை உதவிசெயற்பொறியாளர் மோகன்குமார், உதவி பொறியாளர் செந்தில்குமார் ஆகியோர் நேற்று முன்தினம் தண்ணீர் திறந்து விட்டனர். இதைத்தொடர்ந்து அணையில் இருந்து இரு மதகு வழியாக வெளியேறிய தண்ணீரில் விவசாயிகள் மலர் தூவி வணங்கினார்கள். அணையில் இருந்து தினமும் 20 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதன் மூலம் கொங்கர்பாளையம், கவுண்டம்பாளையம், வாணிப்புத்தூர், புஞ்சைதுறையம்பாளையம், அரக்கன்கோட்டை பகுதியில் 2,498 ஏக்கர் நிலங்கள் பாசன வசதியை பெறுகின்றன. அணையில் இருந்து வருடத்திற்கு 4 முறை பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதை 6 முறையாக உயர்த்தி தண்ணீர் திறந்து விட்டால், இந்த பாசனப்பகுதியில் விவசாயத்தை நன்றாக செய்ய முடியும் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

ஈரோடு, : பெருந்துறை வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் இன்று (26ம் தேதி) மற்றும் 30ம் தேதி நடக்கவிருந்த கொப்பரை ஏலம் ரத்து செய்து அறிவிக்கப்பட்டுள்ளது. பெருந்துறை வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் ஒவ்வொரு வாரமும் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் கொப்பரை ஏலம் நடைபெறுகிறது. இதில் ஈரோடு, நாமக்கல், கரூர், சேலம், திருப்பூர் விவசாயிகள் பங்கேற்கின்றனர். ஆண்டு கணக்கு முடிப்பை முன்னிட்டு 26ம் தேதி (இன்று) மற்றும் 30ம் தேதி நடக்க உள்ள ஏலம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மீண்டும் அடுத்த மாதம் 2ம் தேதி ஏலம் நடைபெற உள்ளது. இதேபோல் அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்திலும் கொப்பரை ஏலம் ரத்து செய்யப்பட்டு அடுத்த ஏலம் வருகின்ற 1ம் தேதி ஏலம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**கொப்பரை ஏலம் ரத்து**

ஈரோடு, : பெருந்துறை வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் இன்று (26ம் தேதி) மற்றும் 30ம் தேதி நடக்கவிருந்த கொப்பரை ஏலம் ரத்து செய்து அறிவிக்கப்பட்டுள்ளது. பெருந்துறை வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் ஒவ்வொரு வாரமும் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் கொப்பரை ஏலம் நடைபெறுகிறது. இதில் ஈரோடு, நாமக்கல், கரூர், சேலம், திருப்பூர் விவசாயிகள் பங்கேற்கின்றனர். ஆண்டு கணக்கு முடிப்பை முன்னிட்டு 26ம் தேதி (இன்று) மற்றும் 30ம் தேதி நடக்க உள்ள ஏலம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மீண்டும் அடுத்த மாதம் 2ம் தேதி ஏலம் நடைபெற உள்ளது. இதேபோல் அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்திலும் கொப்பரை ஏலம் ரத்து செய்யப்பட்டு அடுத்த ஏலம் வருகின்ற 1ம் தேதி ஏலம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**70 சதவீத தேயிலை தூள் விற்பனை**

குன்னூர், : குன்னூர் அரசு கூட்டுறவு தேயிலை ஏல மையத்தில் இந்தாண்டுக்கான 11வது ஏலம் நேற்று முன்தினம் நடந்தது. இதில் மொத்தம் 2 லட்சத்து 54 ஆயிரத்து 762 கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 1 லட்சத்து 54 ஆயிரத்து 81 கிலோவும், டஸ்ட் ரகம் 1 லட்சத்து 581 கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்று இருந்தாலும் குறைந்த அளவில் மட்டுமே தேயிலை தூள்களை கொள்முதல் செய்தனர்.

இதனால் 70 சதவீத தேயிலை தூள் விற்பனையானதுடன் அனைத்து ரகத்திற்கும் கடந்த வார விலை தான் வழங்கப்பட்டது. அதன்படி இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ஒன்றுக்கு ரூ.65 முதல் ரூ.70 உயர் வகை ரூ.70 முதல் ரூ.75, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.70 முதல் ரூ.75, உயர் வகை ரூ.80 முதல் ரூ.85 வரை விலை கிடைத்தது. கடந்த சில வாரங்களாக தேயிலை தூள் விற்பனையும் அதன் விலையும் குறைந்து வந்த நிலையில்

இந்த வாரம் விலையும் விற்பனை அளவும் உயராமல் இருந்ததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**விவசாயிகளுக்கான தொழில் நுட்ப பயிற்சி முகாம்**

அரியலூர், : மணக்குடி கிராமத்தில் விவசாயிகளுக்கு காய்கறி பயிர்களில் தொழில் நுட்ப பயிற்சி முகாம் நடைப்பெற்றது. அரியலூர் மாவட்டம் மணக்குடி கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் காய்கறி பயிர்கள் சாகுபடி குறித்த தொழில் நுட்ப பயிற்சி முகாம் நடைப்பெற்றது. முகாமிற்குவேளாண்மை உதவி இயக்குநர் மோகன் தலைமை வகித்தார். அட்மாதிட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் பழனிசாமி பேசுகையில் காய்கறி பயிர்களான வெண்டை, கத்தரி, தக்காளி, முருங்கை, வாழை, மிளகாய் ஆகிய பயிர்கள் விவசாயிகள் அதிகம் மகசூல் பெறலாம்.

ஆனால் அதுபற்றிய சில தொழில் நுட்பங்களை தெரிந்து கொண்டு அதற்கேற்றாற் போல் விவசாயம் செய்தால் நிச்சயம் நல்ல மகசூலை விவசாயிகள் பெறமுடியும். வெண்டையில் பல்வேறு ரகங்கள் உள்ளது. அது போன்று தக்காளி, மிளகாயிலும் பல்வேறு ரகங்கள் பற்றி உங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட உள்ளது. மேலும் வெண்டை, கத்தரி, தக்காளி, மிளகாய் ஆகியவற்றில் வரக்கூடிய காய்ப்புழு, தண்டுப்பூச்சி, இளங்குருத்து பூச்சி, அசுவினி, செம்பேன், இலைச்சுருட்டுபுழு, வெள்ளை ஈ, கரையான் ஆகியவற்றின் தாக்குதல் பற்றியும், அவற்றை கட்டுப்படுத்தும் முறைகள் பற்றியும், இப்பூச்சிகள் எவ்வாறு ஒவ்வொரு காய்கறி பயிர்களிலும் வெவ்வேறு வகையான தாக்குதலை ஏற்படுத்துகின்றன. இதேபோல் வெண்டை, கத்தரி, மிளகாய், தக்காளி பயிர்களில் வரக்கூடிய நோய்களான வாடல்நோய், ஆந்தரக்னோஸ், பாக்டீரிய இலைக்கருகல் நோய், வேரழுகல் நோய், புழு அழுகல் நோய், தண்டு அழுகல் நோய் ஆகியவற்றினை எவ்வாறு இனங்கண்டு பாதுகாப்பு உக்திகளை மேற்கொள்வது என்பது குறித்தும் கூறினார். பின்னர் விவசாயிகள் அனைவரையும் நேரிடையாக கத்தரி, மிளகாய், தக்காளி மற்றும் வெண்டை வயலுக்கு அழைத்து சென்று இவைகளில் வரக்கூடிய பூச்சிகள் மற்றும்

நோய்களை எவ்வாறு இனங்கண்டு பயிர்பாதுகாப்பு மருந்துகளை பயன்படுத்தி கட்டுப்படுத்துவது என்பதன் செயல்விளக்கம் செய்து காண்பித்தார்.

இதில் பங்கேற்ற விவசாயிகள் வெண்டை, தக்காளி, கத்தரி, மிளகாயின் நோய் எதிர்ப்பு ரகங்கள் பற்றியும், இப்பகுதிக்கு ஏற்ற காய்கறி ரகங்கள் பற்றியும், பொருளாதார சேதநிலை அறிந்து எவ்வகையில் பயிர்பாதுகாப்பு உக்திகள் மேற்கொள்வது என்பது பற்றியும் சந்தேக வினாக்கள் எழுப்பி தெளிவுபெற்றனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மாதிட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் வாசுகி, சுந்தரமூர்த்தி ஆகியோர் செய்திருந்தனர். முடிவில் அட்மாதிட்ட விவசாயி சீமான் நன்றி கூறினார்.

**வாழைத்தார் விலை உயர்வு**

பரமத்தி வேலூர், : நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலூகா பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் வாழை சாகுபடி செய்துள்ளனர். கடந்த வாரத்தில் பூவன் வாழைத்தார் ரூ.500க்கும், ரஸ்தாலி வாழைத்தார் ரூ.450க்கும், கற்பூரவள்ளி வாழைத்தார் ரூ.450க்கும், பச்சை நாடன் வாழைத்தார் ரூ.550க்கும், மொந்தன் வாழைக்காய் ரூ.600க்கும் விற்பனையானது. நடப்பு வாரத்தில் பூவன் வாழைத்தார் ரூ.550க்கும், ரஸ்தாலி வாழைத்தார் ரூ.500க்கும், கற்பூரவள்ளி வாைழத்தார் ரூ.500க்கும், பச்சை நாடன் வாழைத்தார் ரூ.600க்கும், மொந்தன் வாழைக்காய் ரூ.700க்கும் வியாபாரிகள் வாங்கி சென்றனர். வாழைத்தார் விலை உயர்வு ஏற்பட்டதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

**சிறிய வெங்காயம், மாங்காய் விலை சரிவு**

தாராபுரம், ஓட்டன்சத்திரம் பகுதியில் சிறிய வெங்காயம் விளைச்சல் அதிகரிப்பால் பாவூர்சத்திரம் மார்க்கெட்டிற்கு தினசரி 500 டன்னுக்கு மேல் விற்பனைக்கு வருகிறது. வரத்து அதிகரிப்பால் கிலோ ஒன்றுக்கு ரூ.10 முதல் 12 வரை தான்விற்பனையாகிறது. கடந்த 20 நாட்களுக்கு முன்பு சீசன் இல்லாததால் பாவூர்சத்திரம் மார்க்கெட்டிற்கு செங்கோட்டை மற்றும்

தென்காசி, குற்றாலம் பகுதியில் 10 டன் முதல் 20 டன் வரை தான் மாங்காய்கள் வரத்து இருந்து. இதனால் கிலோ ஒன்றுக்கு 50 முதல் 85 வரை விற்பனையானது.

தற்போது கோடை கால விளைச்சலால் மாங்காய் மகசூல் அதிகரித்து மார்க்கெட்டிற்கு தினசரி 200 டன்னுக்கு மேல் விற்பனைக்கு வரத் தொடங்கியுள்ளது. இதனால் கடந்த சில வாரங்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.50 முதல் ரூ.85 வரை விற்ற மாங்காய் திடீரென்று விலை சரிந்து ரூ.10 முதல் ரூ.12 வரை விற்பனையானது. வரத்து அதிகரிப்பு விற்பனையில் மந்தம் ஏற்பட்டதால் இந்த விலை சரிவு என்று தெரிகிறது. இதனால் மாங்காய் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**பாவூர்சத்திரம் மார்க்கெட்டில் எலுமிச்சை, மல்லி விலை திடீர் உயர்வு**

பாவூர்சத்திரம், : பாவூர்சத்திரம் மார்க்கெட்டில் எலுமிச்சை மற்றும் மல்லி விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். பாவூர்சத்திரம் காமராஜர் தினசரி மார்க்கெட்டிற்கு ஆலங்குளம் அருகேயுள்ள ஐந்தாம்கட்டளை, கல்லூத்து, மேலகிருஷ்ணப்பேரி, கடையம், சேர்வைக்காரன்பட்டி, ராஜாங்கபுரம் பகுதிகளில் இருந்து எலுமிச்சை விவசாயிகளால் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. இங்கு விற்கப்படும் எலுமிச்சைகள் பெரும்பகுதி கேரளாவிற்கும், உள்ளூர் மாவட்டத்திற்கும் விற்கப்படுகிறது. தற்போது மாவட்டத்தில் கோடை வெயில் கடுமையாக இருப்பதால் சிறுகடை உரிமையாளர்கள் சர்பத் மற்றும் ஜூஸ் போடுவதற்கும், கேரளாவிற்கும் எலுமிச்சையை பெருமளவில் வாங்கி செல்கின்றனர். கடந்த வாரம் விற்பனையில் மந்தம் ஏற்பட்டு எலுமிச்சை விலை கிலோ ஒன்றுக்கு ரூ.50 முதல் 65க்கும் விற்கப்பட்டது.

ஆனால் நேற்று பாவூர்சத்திரம் மார்க்கெட்டிற்கு எலுமிச்சை வரத்து அதிகரித்து இருந்தாலும் விற்பனையில் ஏற்றம் ஏற்பட்டு கிலோ ஒன்றுக்கு ரூ.90 முதல் 100 வரை விற்பனையானது. இதேபோல் வெயில் தாக்கம்

மற்றும் நோய் தாக்குதலால் மல்லி வரத்து குறைந்த அளவே விற்பனைக்கு வருகிறது. இதனால் கடந்த வாரம் மல்லி கிலோ ரூ.5 முதல் ரூ.8 வரை விற்ற மல்லி நேற்று திடீரென விலை அதிகரித்து கிலோ ஒன்றுக்கு ரூ.35 முதல் 40 வரை விற்பனையானது. இந்த விலை ஏற்றத்தால் எலுமிச்சை மற்றும் மல்லி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**சீனாபுரம் சந்தையில் ரூ.70 லட்சத்துக்கு மாடுகள் விற்பனை**



சீனாபுரம் சந்தையில் ரூ.70 லட்சத்துக்கு மாடுகள் விற்பனை ஆனது.

சீனாபுரம் சந்தை

பெருந்துறை அருகே உள்ள சீனாபுரத்தில் வாரந்தோறும் வெள்ளிக்கிழமை மாட்டுச்சந்தை நடைபெற்று வருகிறது. அதன்படி நேற்று கூடிய சந்தைக்கு சேலம் மாவட்டம் முத்தநாய்க்கன்பட்டி மற்றும் வெளி மாநிலங்களான பெங்களூர் சந்தாபுரம், ஆந்திர மாநிலம் சிந்தாமணி ஆகிய பகுதிகளில் இருந்து கலப்பின மாடுகள், ஜெர்சி மாடுகள் என மொத்தம் 250 மாடுகள் விற்பனைக்கு பிடித்து வரப்பட்டு இருந்தன. அதேபோல் 6 மாதம் முதல் 1 வருடம் ஆன கறவை கன்றுக்குட்டிகள் 150-க்கும் மேல் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன.

பசுமையின் காரணமாக ரூ.40 ஆயிரம் வரை விலை போன கலப்பின மாடுகள் தற்போது வறட்சியின் காரணமாக நேற்று நடந்த சந்தையில், ரூ.35 ஆயிரம் வரையே விற்பனை ஆனது.

ரூ.70 லட்சத்துக்கு விற்பனை

மேலும் ஜெர்சி இன மாடுகள் ரூ.20 ஆயிரம் முதல் ரூ.30 ஆயிரம் வரையும், கன்றுக்குட்டிகள் ரூ.10 ஆயிரம் முதல் ரூ.15 ஆயிரம் வரையும் விலை போனது.

கேரள மாநிலம் கள்ளிக்கோட்டை மற்றும் ஈரோடு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருந்த ஏராளமான விவசாயிகள் மாடுகளை விலை பேசி பிடித்து சென்றனர். மொத்தம் ரூ.70 லட்சம் வரை மாடுகள் விற்பனை ஆனதாக விவசாயிகளும், வியாபாரிகளும் தெரிவித்தனர்.

**நாகை மீனவர்களின் வலையில் அதிக அளவில் சிக்கும் மத்தி மீன்கள்**



நாகை பகுதி மக்களின் பிரதான தொழிலாக மீன்பிடித்தொழில் விளங்கி வருகிறது. நாகப்பட்டினத்தில் இருந்து தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும், வெளிமாநிலங்களுக்கும் மீன்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தற்போது நாகப்பட்டினம் கடலில் மத்தி மீன்களின் வரத்து அதிகமாக உள்ளது. இந்த மீனில் மருத்துவகுணம் அதிகமாக உள்ளதால் இதை நிறைய பேர் விரும்பி உண்கின்றனர். மீனவர்கள் வலையில் மத்தி மீன்கள் அதிக அளவு சிக்குவதால் அவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதுகுறித்து நாகையை சேர்ந்த மீனவர் ஒருவர் கூறியதாவது:-

மார்ச் மாதத்தில் தொடங்கும் மத்தி மீன்களின் சீசன் மே மாதம் வரை இருக்கும். இந்த மீன்கள் பைபர் படகில் செல்லும் மீனவர்களின் வலையில் மட்டுமே அதிக அளவில் சிக்கும். இந்த மீன்கள் கேரளாவிற்கு ஏற்றுமதி

செய்யப்படுகிறது. தற்போது நாங்கள் எதிர்பார்த்த விலை கிடைக்கவில்லை, இன்னும் சில தினங்களில் விலை அதிகமாகும் என எதிர்பார்க்கிறோம் என்றார்.

**நீர்மட்டம் குறைந்ததால் மேட்டூர் அணையின் நீர்தேக்க பகுதிகள் விளைநிலங்களாக மாறின**



மேட்டூர் அணையின் நீர்மட்டம் குறைந்து வருவதால், அணையின் நீர்தேக்க பகுதிகள் விளைநிலங்களாக மாறி உள்ளன.

மேட்டூர்அணை

மேட்டூர் அணையின் நீர்தேக்க பகுதிகளான பண்ணவாடி, மூலக்காடு, சேத்துக்குளி கோட்டையூர் ஆகிய இடங்களில் முழுவடை விவசாயம் செய்யப்படுவது வழக்கம். இந்த முழுவடை விவசாயம் மூலம் நீர்தேக்க பகுதிகளில் கம்பு, சோளம் போன்ற தானிய பயிர்களும், தோட்டப்பயிர்களும்

விளைவிக்கப்பட்டுவருகின்றன.

ஒரு சில நீர்தேக்க பகுதிகளில் பருத்தி, எள்,புகையிலை போன்ற பணப்பயிர்களும் விளைவிக்கப்பட்டு வருகிறது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் கணிசமாக குறையும் போது, அணையின் நீர்தேக்கப்பகுதிகளில் முப்போக சாகுபடி செய்யப்படுவது வழக்கமாகி உள்ளது. இந்த நிலையில் நடப்பாண்டில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் குறைந்ததால் அணையின் நீர்தேக்க பகுதிகளில் முழுவடை பாசனம் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. கடல் போல் தண்ணீராய் காட்சி அளித்த நீர்தேக்க பகுதிகள் தற்போது பச்சைபசேலென விளைநிலங்களாக காட்சி அளிக்கிறது.

விவசாயிகள் மகிழ்ச்சி

மேட்டூர் அணையின் நீர்தேக்க பகுதிகளில் முழுவடை பாசனம் மூலம் ஒரு போக சாகுபடியை இறுதி செய்துள்ள முழுவடை விவசாயிகள் தற்போது இரண்டாம் போக சாகுபடிக்கு தயாராகி வருகின்றனர். இதனால் முழுவடை விவசாயிகள் தற்போது இரண்டாம் போக சாகுபடிக்கு தயாராகி வருகின்றனர். இதனால் முழுவடை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கடந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சியினால் தங்களது கால்நடைகளுக்கு தேவையான தீவன பயிர்களை கூட விளைவிக்க முடியாத நிலையில் இருந்த விவசாயிகள் தற்போது தங்களது கால்நடைகளுக்கு போதுமான தீவனப்பயிர்களை தேக்கி வைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

**அருவிகள் வறண்டன குற்றாலத்தில் அனல்காற்று வீசுகிறது**



தென்காசி,

எந்த ஆண்டும் இல்லாத வகையில் குற்றாலம் அருவிகள் கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக வறண்டு காணப்படுகின்றன. குற்றாலம் பகுதியில் அனல் காற்று வீசுவதால் சுற்றுலா பயணிகள் வருகை அடியோடு பாதிக்கப்பட்டுள்ளது.

<u>குற்றாலம் அருவிகள்</u>

நெல்லை மாவட்டம் குற்றாலம் மெயின் அருவி, ஐந்தருவி, பழஅருவிகளில் ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் சீசன் நிலவும். அந்த 3 மாதங்களிலும் குற்றாலம் பகுதியில் சாரல் மழை பெய்வதுடன், அருவிகளில் தண்ணீர் கொட்டும். மூலிகை கலந்த தண்ணீராக இருப்பதால், இந்த அருவிகளில் குளிக்க வெளிநாடுகள், வெளிமாநிலங்களில் இருந்தும் தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் குற்றாலத்துக்கு வந்து செல்வர்.

சீசன் நாட்களில் அனைத்து அருவிகளிலும் கூட்டம் நிரம்பி வழியும். சுற்றுலா பயணிகள் நீண்ட வரிசையில் காத்திருந்து குளித்துச் செல்வர். அக்டோபர், நவம்பர், டிசம்பர், ஜனவரி ஆகிய மழைக்காலங்களிலும்

குற்றாலம் அருவிகளில் ஓரளவு தண்ணீர் கொட்டும். ஓரிரு நாட்களில் வெள்ளப்பெருக்கும் ஏற்படும்.

<u>கடும் வறட்சி</u>

கடந்த ஆண்டு இறுதியில் தமிழகம் முழுவதும் கடும் மழை பெய்து சென்னை, கடலூர் உள்பட பல்வேறு மாவட்டங்கள் வெள்ளத் தண்ணீரில் மிதந்த காலங்களிலும் குற்றாலத்தில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு வந்தது. சில நாட்கள் அருவிகளில் மரங்கள், செடி, கொடிகள் விழுந்து வந்ததாலும், தடுப்புகளைத் தாண்டி வெள்ளமாக தண்ணீர் கொட்டியதாலும், பல நாட்கள் சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டு இருந்தது.

<u>அனல்காற்று</u>

ஜனவரி மாதம் முதல் கடந்த ஒரு வாரத்துக்கு முன்பு வரை குற்றாலம் மெயின் அருவியில் சிறிதளவு தண்ணீர் விழுந்து வந்தது. குற்றாலம் பகுதியில் குளிர்ந்த காற்று வீசி வந்தது. கடந்த ஒரு வாரமாக குற்றாலம் அருவிகள் வறண்டு பாறையாக காட்சி அளிக்கின்றன. குற்றாலம் மற்றும் சுற்றுப்புறங்களில் அனல் காற்று வீசி வருகிறது. பகல் நேரங்களில் பொதுமக்கள் வெளியே நடமாட முடியாத அளவுக்கு வெயிலின் கடுமை காணப்படுகிறது.

வீடுகளிலும் கடும் வெப்பம் வாட்டி வருவதால் பொதுமக்கள் அவதிக்கு உள்ளாகி வருகின்றனர். எந்த ஆண்டும் இல்லாத வகையில் குற்றாலத்தில் பகல் நேரத்தில் அனல்காற்று வீசி வருவதால் சுற்றுலா பயணிகள் வரத்து அடியோடு பாதிக்கப்பட்டுள்ளது. கடைத் தெருக்கள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.